செ.கு.எண்:30 நாள்:15.07.2021

# செய்தி வெளியீடு

## இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், செங்கனாவரம் கிராமத்தில் உள்ள பிச்சாங்குட்டையில் தவறி விழுந்து 2 சிறுமிகள் உயிரிழப்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் மற்றும் நிவாரண உதவி அறிவிப்பு

இராணிப்பேட்டை மாவட்டம், கலவை வட்டம், செங்கனாவரம் கிராமத்தில் உள்ள பிச்சாங்குட்டையில் 14-7-2021 அன்று புதிய காலனி, மூதாகோயில் தெருவில் வசிக்கும் திரு. மணி என்பவரின் இளைய மகள் கீர்த்தி (வயது 9) மற்றும் திரு. இராஜீவ்காந்தி என்பவரின் இளைய மகள் கல்பனா (வயது 11) ஆகியோர் தவறி விழுந்து உயிரிழந்தனர் என்ற துயரச் செய்தியை அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்தச் சிறுமிகளின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்த 2 சிறுமிகளின் குடும்பத்தினருக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9